# விளம்பரம் VLAMBARAM™

☎: 416-282-8059 மாதமிருமுறை வெளிவரும் சமூக முன்னேற்றப் பத்திரிகை இலவசம் FREE

நதி 09 - பாலம் 05 MARCH 01, 1999



## வீடு விற்பது, வாங்குவது

வாழ்வில் முக்கியமான செயல்களில் ஒன்று.
எனவே இவை பற்றி பூரணமான இலவச
ஆலோசனைகளைப் பெற அழையுங்கள்:

☎: 416-287-2183/491-4002

ராஜா எம். மகேந்திரன் sales rep.

RE/MAX Crossroads Rlty Inc.

நம்பிக்கை ▲ நேர்மை ▲ திறமை



- வாழைப்பழக் கேக் செய்வது எப்படி (பக்கம் 13)
- ஏமாற்றாதே ஏமாறாதே (பக்கம் 2)
- இருதயம் ஒரு இயந்திரம் (பக்கம் 5)
- உணவில் கொழுப்பைக் குறைக்க சில வழிகள்? (பக்.4)
- 10 வயது சதுரங்க மேதை - முருகன்? (பக்கம் 10)
- மற்றுமொரு தமிழ் மகனின் விளையாட்டு சாதனை? (பக். 8)
- விலைகூடிய எரிபொருள் பாவிப்பது காரிற்கு சிறந்ததா? (பக்கம் 03)
- வீடு வாங்கும்போது குறைந்த முதலீடா, கூடிய முதலீடா சிறந்தது (பக் 12)



## SABONA & Gift

"முடி உதிரும் தொல்லை இனி இங்கு இல்லை
"ஏவமாட்டின்" சகல கலைமகள்
புத்தக நிலையங்களிலும் கிடைக்கும்

☎: (416) 264-8787 ☎: (416) 269-8151

3238 Eglinton Ave. E. Scarborough, Ont. M1J 2H6
(கலைமகள் புத்தக நிலையத்திற்கு உள்ளே)


## அறிந்து அதன்படி செயல்பட சில உண்மைகள்

- ஒரே எண்ணம் உடையவர்கள் சேர்ந்தால், கடலையும் வற்றவைக்க முடியும்
- மலர்ந்த முகம் சாதாரண உணவையே அறுசுவை விருந்தாக்கிவிடும்.
- பக்கத்து வீட்டுக்காரரே நாம் முகம் பார்த்துக் கொள்ளும் கண்ணாடி
- குணப்படுத்துவது இறைவன், சன்மானம் பெறுபவர் மருத்துவர்.
- நல்ல தளபதியின் கீழ் மோசமான வீரர்களைக் காணமுடியாது
- காதல் தானாகக் கிடைக்க வேண்டும்; விலை கொடுத்து அதனை வாங்க முடியாது
- உதவி செய்யும் நண்பன் உனது நெருங்கிய உறவினன்
- கடனுக்கு விற்றால் வியாபாரம் பெருகும்; ஆனால் வருமானம் குறையும்
- உறுதியுடன் இருங்கள்; எல்லாக் காரியங்களும் நிறைவேறிவிடும்

## சிந்தனைத் துளிகள்

### கடமை, கண்ணியம், கட்டுப்பாடு

**கண்ணியம் -**

கண்ணியம் என்பது பல பண்புகளின் சேர்க்கையே. ஒருவர் பண்பாளர் என்றால் அவர் கண்ணியம் உடையவர் என்றே கருத வேண்டும். கண்ணியம் என்பது சுய ஒழுக்கம், நீதி, நேர்மை, நியாயம், பெரியோரிற்கு கீழ்ப்படிதல், இனிமையான பேச்சு, கனிவான அணுகுமுறை, சீரிய பண்பு இந்த எட்டு பண்புகளின் கூட்டமைப்பே கண்ணியம் ஆகும்.

வாழவிரும்பும் நாம் கண்ணியம் தவறாமல் வாழப்பழகுதல் வேண்டும். எப்படியாவது வாழலாம் என்பதனை மறந்து, எங்களிற்கு நாமே ஒரு கோடுபோட்டு வாழப்பழகுதலே வாழ்வில் அர்த்தமாகும்.

பிள்ளைகளின் விருப்பு வெறுப்புகளை அறிந்து அதற்கேற்ப செயல்படும் தாய், தந்தை இருக்கும் போது, தாய், தந்தை, சகோதரர்களின் அன்பு, மானம், மரியாதை குறையாமல் நடக்கும்

பிள்ளைகள் இருக்கும் போதும் துன்பம் என்ற சொல்லிற்கே இடமில்லை- "யாரோ"

## உன்னை அறிந்தால்........

வெற்றியடைய கண்டுபிடித்த வழிமுறைகள் பல. அறிவுஜீவிகள், மேதைகள் பணத்தில் தன்னிறைவு பெற்றவர்கள் தம்வாழ்வில் நிகழ்ந்த முறைகளையும் மற்றவர்கள் வாழ்வில் கிடைத்த அனுபவங்களையும் கொண்டு மனிதனின் வெற்றிக்கு பல ஆலோசனைகளை கூறியுள்ளார்கள். வெவ்வேறு அறிஞர்கள் வித்தியாசமான ஆலோசனைகளைக் கூறியுள்ளார்கள்.

**21 ஆலோசனைகளைப் பற்றிப் பார்ப்போம்.**

1. உங்களிற்கேற்ற நிகரானவரை திருமணம் செய்து கொள்ளுங்கள். இந்த ஒரு முடிவ உங்களுடைய 90% சந்தோஷத்தையோ அல்லது துன்பத்தைத் தீர்மானிக்கும்.
2. நீங்கள் விரும்பும் துறையில் வேலை செய்யுங்கள். இதோடு உங்கள் நேரத்திற்கும் ஆற்றலுக்கும் பெறுமதியாக வேலை செய்யுங்கள்
3. மக்கள் எதிர்பார்ப்பதிலும் பார்க்க கூடிதலாகவும் சந்தோஷமனத்துடன் செயல்படுங்கள். (தொடர்ச்சி 8ம் பக்கம்)




SINGAPORE CELLULAR

Bell Mobility

$50.+Tax per Month

CANTEL

மாலை 7 மணி தொடக்கம்
காலை 7 மணி மட்டும் இலவசம் (FREE)
வெள்ளி மாலை 7 மணி தொடக்கம்
திங்கள் காலை 7மணி மட்டும் இலவசம் (FREE)
175 min FREE (Month) Add. 20 cents only
Additional every Min. 20 சதம் மட்டுமே

Mobile Message, Call Forwarding FREE
Call Display, Call Waiting FREE, Per Second Billing
For more Information: சத்தி (416) 745-2378

Hotline: (416) 980-1234

## துரித பணமாற்றுச் சேவை

வவுனியா - கொழும்புச் சுற்றுப் புறங்களுக்கும் - சிங்கப்பூர் - சென்னை ஆகிய இடங்களுக்கு கடுகதியில் பணம் அனுப்புவதற்கு

மு. காசிப்பிள்ளை & சன்ஸ்

☎ (416) 267-8221

## சிவாகம கிரியா பீடம்



☎: (416) 724-7480

திருமணம், பதிவுத்திருமணம், பூப்பு நீராட்டு விழா, புண்யாக வாசனம், வீடு குடி புகுதல், திருமணம் விஷேச தனபாக்கிய பூஜை கடை திறப்பு, லக்சுமி பூஜை சிரார்த்த மஹாளயாதி பிதிர் பூஜைகள் மற்றும் ஜோதிஷம் பார்த்தல், ஜனன ஜாதகம் எழுதுதல், விவாகப் பொருத்தம் பார்த்தல், மஹாகணபதி ஹோமம் ஆயுஷ்ய ஹோமம் தாரதோஷ மாங்கல்ய தோஷ நிவர்த்தி ஹோமம் மற்றும் முத்து மணவறையா? தலைஅலங்கார ஜோடனைகளா? ஜடை நாகம் ஆண்டாள் மாலைகளா? தலைப்பாகையா? பரத நாட்டிய அலங்கார ஆபரணங்களா? மற்றும் கல்யாண மண்டபமா? உங்கள் தேவைகளுக்கு அணுகுங்கள்.

சிவஸ்ரீ ச. கு. ஸ்ரீதரக்குருக்கள் (கண்ணன் குருக்கள்)
திருமணப் பதிவாளர் / நிர்வாகி சிவாகம கிரியா பீடம்
5 Greenleaf Terr., Scarborough, Ont.



VLAMBARAM, P.O. BOX 37527, 31 TAPSCOTT RD.
SCARBOROUGH, ONT. M1B 5P9, CANADA

TEL: (416) 282-8059
FAX: (416) 282-4978



# அறிவும் ஆக்கமும் (29)

*- விஜே குலத்துங்கம்*

ஏமாற்றுபவர்களையும், ஏமாறுவோர்களையும் நாம் ன்றாட வாழ்க்கையில் காண்கின்றோம். அண்மையில் Gerber என்னும் குழந்தை உணவு உற்பத்தி செய்யும் நிறுவனம் குழந்தை ஒன்றிற்கு 500 டொலர்கள் வீதம் கொடுக்கின்றார்கள் என்ற வதந்தி பரவப்பட்டு, பலபேர் அதை நம்பி, முக்கியமான தகவல்களை அனுப்பி ஏமாந்துள்ளனர். இந்த வதந்தி ஜனவரி மாதம் தொடக்கம் அமெரிக்காவில் ஆரம்பிக்கப்பட்டு தற்போது கனடா தமிழர் மத்தியில் பரப்பப்பட்டுள்ளது. எந்தக் கதை என்றாலும் அதை ஆராயாது எடுத்த மாத்திரத்தில் அதை நம்பி செயற்படுவது, எம்மவரின் மத்தியிலுள்ள ஒரு பெரிய குறைபாடாகும். மேற்கூறப்பட்ட Gerber வதந்தி பணம் பறிப்பதற்காக பரப்பப்பட்டதல்ல, வெறும் புரளியை கிளப்பி விடத்தான் ஆனால் கனடாவில் பெரிய அளவில் பணம் பறிப்பதற்காக, சட்ட திட்டங்களுக்கமைய, அதாவது சட்டங்களினால் ஒன்றும் செய்ய முடியாதவாறு சில மோசடிகள் நடைபெறுகின்றன. இவற்றைப் பற்றி நாம் அறிந்திருப்பது மிகவும் அவசியம். அவற்றில் சிலவற்றைப் பற்றி இன்று பார்ப்போம்.

சிலவேளைகளில் தபால்மூலம் உங்களுக்கு ஒரு கடிதம் அல்லது உரசிப்பார்க்கும் அதிஷ்ட வட்டங்களுடைய ஒரு லொத்தர் சீட்டு வரலாம். கடிதமாயின் நீங்கள் ஒரு பரிசு வென்றிருப்பதாயும் அதைப் பெறுவதற்கு, குறிப்பிட்ட விலாசத்திற்கு பதில் அனுப்புமாறும், ஆனால் நாட்கள் காணது என்பதால், அதை உறுதியாக பெறுவதற்கு பின்வரும் தொலைபேசியை அழையுங்கள் என ஒரு 900 இலக்க தொலைபேசி எண்ணைத் தருவார்கள். அதை அழைத்தால் உங்கள் நேரத்தை இழுத்தடித்து கதைக்கச் செய்வார்கள். இந்த இலக்கங்களுடன் கதைத்தால் கட்டணம் உங்கள் தொலைபேசி பில்லில் நிமிடத்திற்கு 3 டொலர் என்ற வீதத்தில் 40 டொலர்கள் வரையில், பில் வரும். இறுதியில் டொலர் 1.37 க்கு உங்கள் பரிசுத்தொகைக்கு ஒரு காசோலை அனுப்பப்படும். உறுதிசெய்யப்பட்ட படி உங்களுக்கு பரிசுத் தொகை கிடைத்ததால் வழக்கு தொடரமுடியாது. இதேபோல் லொத்தர் சீட்டை சுரண்டி மூன்று வட்டங்களில் ஒரே குறியீடு வந்தால் பரிசு என்று குறிப்பிடப்பட்டு, பரிசைப்பெற 900 இலக்க தொலைபேசியை அழைக்கும்படி கூறியிருப்பார்கள்.

இதில் முக்கியமாக கவனிக்கப்பட வேண்டிய விடயம் என்ன என்றால் ஒருவரும் உங்களுக்கு இனாமாக பணத்தையோ பரிசையோ தரமாட்டார்கள். இதனால் அவர்களுக்கு என்ன இலாபம் என்று யோசிக்கவேண்டும்.

இன்னொரு பிரபல்யமான ஏமாற்றுவிடயம் என்னவென்றால் கடன்வசதி அளிக்கும் நிறுவனங்கள் ஆகும். எந்தவிதமான பழைய கடன் குற்றங்கள், வங்குரோத்து நிலைமைகள் இருந்தாலும் கடன்பெறுவது உத்தரவாதம் என விளம்பரம் செய்வார்கள். கடன்பெறச் செல்வோரிடம் முதலில் பதிவுக் கட்டணமாக 200-250 டொலர் கட்டும்படி சொல்வார்கள். மறுநாள் கடன் பணம் தரப்படும் எனக் கூறுவார்கள். ஆனால் பின்னர் வெவ்வேறு காரணங்கள் கூறி இழுத்தடிப்பார்கள். இப்படியாக பலரிடம் பதிவுக் கட்டணம் பெற்றவுடன், திடீரென்று அலுவலகத்தை மூடிவிட்டு, விலாசமே இல்லாது மறைந்து விடுவார்கள். கடன் பணம் தருபவர்கள் கடன் பணத்திலேயே பதிவுக் கட்டணத்தை கழித்துவிட்டு மிகுதியை தரலாம்தானே. இதைப்பற்றி சிந்திப்பவர்கள் குறைவு.

மேற்கூறியதைப் போன்று இன்னொரு மோசடியும் நடக்கின்றது. உங்களுக்கு ஒரு தொலைபேசி அழைப்பு வரும் அதில் நீங்கள் ஒரு அழகானவர் அல்லது கவர்ச்சியானவர் என பலர் சொல்லி கேள்விப்பட்டுள்ளோம். உங்களுக்கு படத்தில் நடிக்க அல்லது Model ஆக விளம்பரப் படங்களுக்கு போட ஆள் தேவை, நேர்முகப் பரீட்சைக்கு வாருங்கள் என கூறுவார்கள். சென்றவுடன் நேர்முகப்பரீட்சையில் தேர்ச்சி பெற்றுவிட்டதாகவும் கூறி சில ஸ்தாபனங்களுக்கு அனுப்பவேண்டும் என கூறி சில பத்திரங்களில் கையெழுத்து போடும்படி கூறுவார்கள். அநேகர் வாசிக்காமல் அதில் கையெழுத்து இட்டு விடுவார்கள். பின்னர் உங்களை பல கோணங்களில் பல புகைப்படங்கள் எடுப்பார். அதன் பின்னர் உங்களுக்கு அறிவிப்பதாக கூறி வீட்டிற்கு அனுப்பிவிடுவார்கள்.

சில நாட்களின் பின்னர், புகைப்படங்கள் எடுத்ததற்கான கட்டணமாக 400அல்லது 500 டொலர்கள் பில் உங்களுக்கு வரும். ஏற்கனவே நீங்கள் கைச்சாத்திட்ட ஒப்பந்தப்படி, நீங்கள் பணத்தை கட்டியே ஆகவேண்டும். உங்களுக்கு நடிக்க சந்தர்ப்பம் கிடைத்தால் அது உங்கள் அதிஷ்டம்தான்.

இன்னுமொரு மோசடியில், உங்களுக்கு தொலைபேசி அழைப்பு வரும். அதில் வீட்டிலிருந்தே ஏராளமான பணம் சம்பாதிக்க வழிஉண்டு என கூறுவார்கள். மேலதிக விபரம் பெறுவதற்கு 20 டொலர் அனுப்பும்படி கூறுவார்கள். பணம் அனுப்பினால் வருவது 2 டொலர்கூட பெறுமதி இல்லாத எப்படி பணம் சம்பாதிக்கலாம் என்ற புத்தகம் மாத்திரமே. இதை விட இன்னுமொரு முறையில், நீங்கள் வீட்டிலிருந்தே சில பொம்மைகள் செய்யலாம் என்று அதற்கு நீங்கள் தேவையான பொருட்களையும் செய்யும் முறையையும் பெற்றுக்கொள்ளலாம் என்றும் செய்து முடிக்கப்பட்ட பொருட்களை அவர்களே விலை கொடுத்து வாங்குவார்கள் எனவும். ஒரு நாளைக்கு வீட்டிலிருந்தே 300-400 டொலர்கள் சம்பாதிக்கலாம் என கூறப்படும். தேவையான பொருட்களை குறிப்பிட்ட பணத்தை அனுப்பி முதலில் பெறுமாறு கூறப்படும். அதிகளவில் ஆசைப்பட்டு அதிகமான பொருட்களை வாங்குவதற்காக அதிக பணத்தை அனுப்புபவர்களும் உண்டு. பணம் அனுப்பினால் அவ்வளவு தான் பொருட்கள் வரவே மாட்டாது. அவர்களுடன் தொடர்பு கொள்ளவும் முடியாது.

எனவே எதற்காகவும் முன்கூட்டியே பணம் அனுப்புவது பிழையான விடயம். இதைப் போன்று பல்வேறு மோசடிகள் பற்றிய விபரம் வன்கூவர் RCMயினரின் Internet Web Page ல் உண்டு. அடுத்த இதழில் இன்னும் பல விடயங்களை தரவுள்ளோம்.

********************************************

"அறிவும் ஆக்கம்" பற்றிய உங்கள் கருத்துக்களை நீங்கள் எந்த வகையான விடயங்களை *இக்கட்டுரையில் எதிர்பார்க்கின்றீர்கள் என்பதை விஜே குலத்துங்கம் - 61 SCARFAIR PATHWAY, SCARBOROUGH, ONT. M1B 4G2 என்ற விலாசத்திற்கு அல்லது wijey@ interlog.com என்ற விலாசத்திற்கு E-Mail ஐ எழுதி அனுப்பவும்.*


புதிய நிர்வாகத்தின் கீழ்

**Markham / Sheppard** பகுதியில்

**NEW SPICELAND**

☎ : 292-0086


## குறுக்கு எழுத்துப் போட்டி இல. 93

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | | ■ | | 2 |
| | ■ | ■ | ■ | ■ | 3 | 4 | |
| 5 | | 6 | | | ■ | ■ | |
| | ■ | | ■ | | ■ | ■ | |
| | ■ | ■ | ■ | 7 | | 8 | |
| 9 | | | | ■ | ■ | | ■ |
| | ■ | ■ | | ■ | 10 | | |
| ■ | 11 | | 12 | | ■ | | 13 |

**இடமிருந்து - வலம்**

1. ஐயப்பன் பக்தர்கள் செல்லும் இடம்
2. தைப்பதற்கு தேவையானது (வல-இட)
3. இடபம்
5. எதிர்பாராமல் நடப்பது
7. ஒரு செய்யுளின் அடி அடுத்த செய்யுளின் முதலாக வரும் பாட்டு
9. சோதனை
10. விருப்பம்
11 ஆண் பூனை
13. குற்றம் (வல - இட)

**மேலிருந்து கீழ்**

1. தருணம்
2. நறுமணம் பூசிய குச்சி
4. சுவை (கீழ் - மேல்)
6. மந்திரம் சொல்
7. நெருப்பு (கீழ் - மேல்)
8. உறங்க வைக்க பாடும் பாட்டு
12. ஒழுங்கு (கீழ் - மேல்)
13. பிரிவு (கீழ் - மேல்)

சரியான விடைகளில் இருவர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படுவர். இவர்களுக்கு "ஸ்பைஸ் லாண்ட்" இல் பாவிக்கக்கூடிய $15, $10 Gift Certificates வழங்கப்படும். இதற்கு cash value கிடையாது. விடைகள் March 29, 99க்கு முன்னர் கிடைக்க வேண்டும். Address: **P.O.Box 37527, 31 Tapscott Rd., Scarborough, Ont. M1B 5P9**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ச | ந் | தி | ர | சே | க | ர் | ■ |
| ங் | ■ | ரு | ■ | ■ | ட் | ■ | தி |
| கீ | ர் | த் | தி | ■ | டெ | ■ | று |
| த | ■ | து | ■ | ■ | று | ன் | இ |
| ம் | ■ | ■ | தி | ற | ம் | ■ | ■ |
| ■ | ப | ர | ண் | ■ | பு | டை | வை |
| நீ | ■ | ■ | ண | ■ | ■ | வி | க |
| தி | ரு | வெ | ம் | பா | வை | ■ | றை |

**#92இல் வெற்றி பெற்றோர்**

1)K. Tharmaruban, Toronto

2) கலாவதி B., Mississauga


நியூ ஸ்பைஸ்லாண்ட்

5800 Sheppard Ave. E.

Unit#16 Scarborough, Ont.

அவித்து அரித்த மா **1lb .53¢ 40 lb** மேல் **Free Delivery**

- கொத்து ரொட்டிக்குரிய ரொட்டி
- **Patty - Rolls - Cutlets - Puddings**
- இடியப்ப **Machine**
- மின் தேங்காய் துருவி

© (416) 288-8177

**E.Mail luxmy@gloimpex.com**

**Special Discount for Take-out / Restaurant & Caterers**

# APPLEMORE AUTOMOTIVE

**DETAILING**
Motor shampoo
Interior shampoo
Exterior wash & waxing






Repairs
safety certification
overall maintenance
under coating &
Rust proofing

உட்புற, வெளிப்புற திருத்த, பராமரிப்பு வேலைகளுக்கு அழையுங்கள்

☎ [416] 285-4998

முகவரி: 2500 LAWRENCE AVE. EAST, UNIT #11
SCARBOROUGH, ONT. ( MIDLAND & LAWRENCE )



## OODAM MAINTENANCE WORKS

Janitorial Services ("Sanitation for the Nation")



* KITCHEN RENOVATIONS
*BATHROOM REVOVATION
*TILES
*PLUMBING



>Railing >Fencing >Welding

Free Estimates

Pl. Call: Thamby - TEL./Fax: (416) 638-2796
18 Brantley Cres. Downsview, NorthYork, M3J 1X5


## Super Gas (விலைகூடியதும் உயர்ந்ததுமான) எரிபொருள் பாவிப்பது சிறந்ததா?



இன்றைய காலத்தில் அதிலும் கனடாவில் வாகனம் வைத்திருப்பது என்பது ஓரளவு கட்டாயமானதும் பல சௌகரியங்களை தருவதுமாக உள்ளது. நாங்கள் அகதிகளாக இங்கு வந்து பல கஸ்டங்களின் மத்தியிலும் எமது வாழ்க்கை தரத்தை உயர்த்திக் கொண்டு இருக்கின்றோம். கஸ்டப்பட்டு நம்மவர் உழைக்கும் பணத்தை கவனமாக செலவழித்தாலே உன்னதமானது. என்னால் முடிந்தவரை எனது அறிவுக்கு எட்டிய பல விடயங்களை நான் உங்களுக்கு வாராவாரம் எழுதிக் கொண்டும் இருக்கிறேன். எனது எழுத்தை வாசித்து விட்டு என்னைப் பாராட்டியவர்களுக்கு எனது முதற்கண் நன்றி.

எனது கடந்த கால Auto Technician அனுபவத்தையும் இன்றைய Honda Sales அனுபவத்தையும் வைத்து சில விடயங்கள் சிறந்தது, சில சிறந்ததல்ல என்ற முடிவுக்கு என்னால் வர முடிகின்றது. அப்படி ஒரு முடிவுதான் Super Gas பாவித்தலிலும் நான் எடுத்த முடிவாகும். இன்று தயாரிக்கப்படும். 99% ஆன வாகனங்கள் Regular Gas (சாதாரண எரிபொருள்) பாவிப்பதற்காக தயாரிக்கப்பட்ட வாகனங்களே. உங்களின் வாகனம் எப்படிப்பட்ட எரிபொருளை உபயோகிப்பதற்காக தயாரிக்கப்பட்டது என்பதை நீங்கள் உங்கள் வாகனத்தை வாங்கும்போது அதனுடன் கிடைத்த Owners Manual மூலம் நீங்கள் அறியமுடியும். 99% வாகனங்கள் சாதாரண எரிபொருள் (Regular Gas) ஐ தான் பாவிக்க சொல்கின்றனர். அதைவிட அதற்காகத்தான் தயாரிக்கப்பட்டும் உள்ளது.

Regular Gas பாவிப்பதன் மூலம் ஏராளமான பணத்தை நீங்கள் சேமிக்கமுடியும். Regular Gas க்கும் Super Gas க்கும் இடையில் குறைந்தது. 10¢ ஒரு லீற்றருக்கு வித்தியாசம் உள்ளதை அவதானிப்பீர்கள். ஒரு தரம் நீங்கள் Full Tank gas நிரப்பும போதே 10¢ x 60 Liter = $6 சேமிக்க முடியும். மாதம் குறைந்தது $24.
வருடத்திற்கு $288.
நீங்கள் அந்த வாகனத்தை 10 வருடங்களுக்கு பாவிக்கும் போது $2880 ஐ உங்களால் சேமிக்க முடிகின்றது.

சிலர் Super Gas ஐ பாவிப்பதால் நல்லம் என்று நினைக்கிறார்கள். உண்மைதான இல்லாமல் இல்லை. ஆனால் அதற்க்கு நீங்கள் கொடுக்கும் விலை என்ன? Super Gas பாவிக்கும் போது உங்கள் வாகனத்தின் குதிரை வலு சிறிது கூடுகிறது. எஞ்சினும் சாதாரண எரிபொருள் பாவிப்பதிலும் பார்க்க சிறிது Clean ஆக இருக்கின்றது.

எனது அறிவுரை என்னவெனின் நீங்கள் சாதாரண எரிபொருளை பாவித்தல சிறந்தது. வருடத்தில் ஒரு தடவையோ இருதடவையோ நீங்கள் எங்காவது தூரப்பிரயாணத்தை மேற்கொள்ளும் போது *(Highway மூலம்) Super Gas* ஐ பாவித்தால் எஞ்சின் Clean ஆகும். மற்றும்படி நீங்கள் சாதாரண எரிபொருளை பாவித்தல் மிகவும் சிறந்தது. அது எஞ்சினுக்கும் நல்லது.

நீங்கள் எப்பொழுதும் ஒரு Brand அதாவது (Shell or Petro Canada or Canadian Tire) என்று ஒரு Bunk ஐ பாவித்தல் சிறந்தது. நீங்கள் Sports Cars வைத்திருந்தால் அவைக்கு Super Gas பாவிப்பதன் மூலம் நீங்கள் அதன் குதிரை வலுவை சிறிது கூட்ட முடியும்.

தொடர்புகளுக்கு:- சோதீஸ் வேலை: (416) 364-1116 அல்லது Cell (416) 704 -1179


*We are entering 8 th year service in Scarborough.*

## Better Work ... Less Money



N.T.E Auto Inc.
New Trade Engineering

We service
EUROPEAN , JAPANESE & DOMESTIC cars.
we are not just a Dealership.

" FULLY LICENSED CLASS 'A' MECHANICS ON DUTY "

We will reduce the worry and expense of maintaining your car by offering:

- Mechanical, Auto Electrical Repairs
- *Air Conditioning Service & Repairs*
- Mechanical Safety Inspection & Certification
- Minor & Major Repairs on European, Japanese & Domestic Cars
- Specializing in BMW
- Parts - repairs rather than replace when possible
- Free Estimates

என். ரி. ஈ. ஓட்டோ இங்.

NTE AUTO INC.
New Trade Engineering

151 NANTUCKET BLVD, UNIT: 12
SCARBOROUGH, ONT.
☎(416) 750 - 1573
SIVABALAN





# ஆரோக்கிய வாழ்வு (28)

- N. செல்வசோதி

## கொலெஸ்ரோல் (Cholesterol), உயர் இரத்த அழுத்தம் (High Blood Pressure) அணுகாதிருக்க

உயிருக்கு ஆபத்து விளைவிக்கக்கூடிய நோய்களான, கொலெஸ்ரோல், இரத்த அழுத்தம் என்பன ஒருவரின் உடலில் தோன்றுவதற்கு மிக முக்கியமான காரணமாக விளங்குவது உடலில் கொழுப்பானது தேவைக்கு அதிகமாகச் சேருவதுதான். கொழுப்புச் சத்து குறைந்து கொண்டு வரும்போது இவ் வியாதிகளும் குணமாகத் தொடங்கும்.

### உடலிலுள்ள கொழுப்புச் சத்தைக் குறைப்பது எப்படி?

உடலில் கொழுப்புச் சத்து சேருவதற்கு பல காரணங்கள் உள்ளன.

(1) அதிக அளவில் மாமிச உணவை உட்கொள்ளுதல்

(2) நெய், பால், தயிர், எண்ணெய், பிஸ்கட், ஐஸ்கிரீம், தேங்காய், இனிப்புப் பண்டங்கள் இவைகளை அளவிற்கு அதிகமாக உணவில் சேர்த்துக் கொள்ளுதல்

(3) அதிகமான கொழுப்புப் பதார்த்தங்களைச் சாப்பிட்டு எந்த ஒரு உடல் உழைப்பும் இல்லாதிருத்தல், பகல், இரவென்றும் பாராமல் அதிக தூக்கம்.

### கொழுப்பைக் குறைக்கும் வழிவகைகள்

(1) மேற்குறிப்பிட்ட உணவு வகைகளை குறைத்துச் சாப்பிடலாம்.

(2) கண்டிப்பாக காலை, மாலை உடற்பயிற்சியுடன், யோகாசனங்கள், பிராணாயாமம் செய்து வருதல்.

(3) கொழுப்புச் சத்து இரத்த நாளங்களில் படிவதால் ரத்த நாளங்கள் சுருங்கி ரத்த ஓட்டம் தடைப்படுகிறது. இருதயத்திற்கு அதிக பளு ஏற்படுகிறது. உயர் இரத்த அழுத்தம் மற்றும் குறைந்த ரத்த நோய்கள் தோன்றி மாரடைப்பு வருவதற்கு ஏதுவாகிறது. கொழுப்புச் சத்தைக் குறைக்கப் பழங்களையும் பச்சைக் காய்கறிகளையும் சாப்பிடவேண்டும்.

"அளவிற்கு அதிகமான அமிர்தமும் நஞ்சாகும்" என்பது பழமொழி. உடல் உழைப்பு இல்லாமல் அதிகமாக உண்பதால் உடல் குண்டாகி விடும். பின் உடலை மெலியச் செய்வதென்பது கடினமான காரியம். உடல் எடை ஒரு வியாதியே இதனால் ரத்த அழுத்த நோய், இருதய சம்மந்தமான நோய் வர வாய்ப்புண்டு.

இருதயம்தான் உடல் முழுவதற்கும் இரத்தத்தை அழுத்திப் பாயச் செய்கிறது. உடல் கனம் அதிகமாகிவிட்டால் இருதயத்திலிருந்து உடலின் அனைத்துப் பாகங்களுக்கும் ரத்தத்தை அழுத்திப் பாய்ச்ச இருதயம் சிரமப்படும். அப்போதுதான் திடீரென மாரடைப்பு நோய் வந்துவிடுகிறது. முறையான 'யோகாசனம்' பயிற்சி செய்பவர்கள் நிச்சயம் மாரடைப்பு நோயிலிருந்து தப்ப முடியும். குண்டாக இருப்பவர்கள் நெடுந்தூரம் நடக்கவோ படிக்கட்டில் ஏறவோ திணறுவார்கள். களைப்பு, மூச்சுத் திணறல் என்பன ஏற்படும்.

அநேகமாக பெண்கள் மகப்பேறு பெற்றதும் குண்டாகி விடுவார்கள். இதற்கு காரணம் தைராயிட் சுரப்பி அதிகமாக வேலை செய்வதுதான். இதனால் பெண்கள் தைராயிட் சுரப்பியை கட்டுப்படுத்தக் கூடிய சர்வாங்க ஆசனம் விபரீதகரணி போன்ற பயிற்சிகளை தினமும் செய்து வரவேண்டும். மாமிச உணவு மற்றும் கொழுப்பு மிகுந்த பண்டங்கள் சாப்பிடுவதை குறைத்துக் கொள்ள வேண்டும்.

உணவில் காய்கறி பழங்களை அதிகமாகச் சேர்ப்பதுடன் பகலில் உறங்கும் பழக்கத்தை தவிர்க்க வேண்டும்.

-நன்றி யோகக்கலை

## யோகாசன வகுப்பு

கனேடிய இலங்கை பட்டதாரிகள் சங்கத்தின் சார்பில் கடந்த 3 வருடங்களாக அனுபவமிக்க ஆசிரியரால் பிரதி ஞாயிறுதோறும் காலை 7:30 மணிக்கு Markham /Ellesmere இற்கு அருகாமையில் வோபன் கொலிஜியேற்றில் (Woburn Collegiate) நடாத்தப் பட்டு வருகின்றது.

மேலதிக தொடர்புகளிற்கு - சத்தி: 291-5853


## SNR OPTICAL

அனைத்து டிசைனர் பிறேம்ஸ் மற்றும் கண்ணாடிகள் (Designer Frames & Sunglasses) மேலும் சகல திருத்த வேலைகள் சிறந்தமுறையில் அனுபவமிக்கவரால் செய்துகொள்ள தொடர்புகொள்ளவும். *அரசாங்க உதவியில் உள்ளவர்கள், மற்றும் அனைத்து காப்புறுதிகளும் ஏற்றுக்கொள்ளப்படும்.

* 60 வயதிற்கு மேற்பட்டவர்களிற்கு சில வசதிகளுமுண்டு.

ரதி - FRAME CONSULTANT (Robert Optician)

☎: (416) 332 9995

## Neelam SILK

வட அமெரிக்காவில் உயர்ந்தரப் பட்டுப் புடவைத் தெரிவிற்கு ஓர் சிறந்த புடவை மாளிகை

## நீலம் சில்க்

அனைத்து மக்களின் அன்பான நல்லாதரவுடன் 8வது ஆண்டில் வெற்றிப் பாதம்பதிக்கும் நீலம்சில்க்

- கிரிஜாவின் சௌந்தர்யா ரை அன் டை (Tie & Die) சாறி
- கிரிஜாவின் சிம்போனி கிறேப் சில்க் சாறிகள்
- கிரிஜாவின் பிரதீபா 2 கலர் தாவணி ரிசு சேலைகள்
- கிரிஜாவின் சுவாயம்வர் ரிசு (Custom Made Special Jari)
- மினி அபூர்வா சேலைகள்



கோலம், ரங்கோலி, அபூர்வா, காஞ்சியின் புதிய டிசைன்கள். இவை மட்டுமல்ல இன்னும் பலவித தெரிவுகள் "நீலம் சில்க்"

"தமிழர் மத்தியில் ஓர் தரமான பட்டுப்புடவை மாளிகை"

1453 GERRARD STREET EAST (Indian Bazzar)

CALL: (416) 778- 7455

FAX: (416) 778-8484

## ஞானம்ஸ் ஸ்ருடியோ

Introducing 1Hour Photo Lab: 3X5 & 8X12

Professional Photographer - கதிர்

☎: (416) 750-8118

2425 EGLINTON AV. E. UNIT 3

KENNEDY/ EGLINTON, SCARBOROUGH

## TV & VCR





ALL MAKES- TV'S, VCR'S CAMCORDERS, STEREOS

MOST REPAIR DONE IN YOUR HOME

FAST SERVICE

Pl Call.: MAHENDRAN B.Sc. Exp. Tech. (416) 286-8990

## ELECTRICAL REPAIRS



உங்களிடமுள்ள சகல விதமான ரெலிவிசன்கள் றேடியோக்கள் வீடியோக்களை குறைந்த செலவிலும்,சிறந்த முறையிலும் குறிப்பிட்ட நேரத்திலும் திருத்திக் கொள்ளநாடுங்கள்

முருகதாஸ் - ☎ 261-6883

## RAAJ WATCH WORK



சகல விதமான மணிக்கூடுகளும் (Watch & Clock) குறைந்த கட்டணத்தில், உத்தரவாதத்துடன் குறித்த தவணையில் திருத்திக் கொள்வதற்கு நகரில் நாட வேண்டிய ஸ்தாபனம்.

NATHAN ☎: (416) 265-5580

2885 LAWRENCE AVE. EAST , BRIMLY/ LAWRENCE (Close to Biway)

# இதயம் ஒரு இயந்திரம்

-ஜோதிட விஞ்ஞானி, வைத்திய கலாநிதி, பேராசிரியர் C.S.S. சோமசுந்தரம்



மனித உடலின் மிகமுக்கிய உறுப்பு இருதயம் (Heart) மனித உடலின் இயக்கத்திற்கு இருதயத்தின் இயக்கம் இன்றியமையாதது.

உடலின் இரத்தக் களஞ்சியம் இன்றியமையாதது. உடலின் இரததக் களஞ்சியம் மிகவும் மிருதுவானது. இரத்தத்தின் பிறப்பிடமானது என்றும் இரக்கமற்ற செயல்களைச் செய்பவர்களை 'இருதயமற்றவர்கள்' என்று கூறுகிறோம். ஆனால் விஞ்ஞான ரீதியாகப் பார்க்கும் போது இருதயம் நம் எண்ணத்திலுள்ளபடி மிகவும் உறுதித் தன்மை வாய்ந்த சதைப் பிண்டம்தான் இந்த இதயம்.

மனித இருதயத்தின் அளவு ஒவ்வொருவரின் இடக்கை முஷ்டியளவே ஆகும். உறுதியான சதைப்பிண்டமான இருதயம்., உடலின் இரத்தக் களஞ்சியமாக இருந்து வருகிறது. சாதாரணமாக எந்தவித அற்பத் தாக்குதலாலும் இருதயம் பாதிக்கப்படுவதில்லை.

உருவத்தில் ஒரு மாங்காய் போன்று காட்சியளிக்கும் இருதயம் ஒவ்வொரு நிமிஷமும் 70 முதல் 80 வரை துடித்து இரத்த உற்பத்தியைப் பெருக்கி உடலெங்கும் வியாபிக்கச் செய்கிறது. கண்கள் மூடியிருக்கலாம், கைகால்கள் அசைவற்றுக் கிடக்கலாம்; ஆனால் இருதயம் மட்டும் மனிதனின் வாழ் நாள் முழுவதும் ...வின்றி இயங்குகிறது.

## அற்புத அமைப்பு

இருதயம் நான்கு அறைகளைக் கொண்ட ஒரு சதைப்பெட்டி. நான்கு அறைகளிலும் நான்கு சிறு வாயில்களைக் கொண்ட ஓர் "இரத்தக் களஞ்சியம்" கீழ்த்தளத்திலுள்ள நீரைக் குறைத்து மேலெழும்பச் செய்ய போரிங்-பம்ப் உதவி வருவதைப்போல ரத்தச் சுழற்சிக்கு இருதயம் தன் வேலையைச் செய்து வருகின்றது. கணக்கற்ற நுண்ணிய ரத்தக் குழாய்களாலேயே இந்த உறுப்பு உருவாகியிருக்கின்றது.

மிகச் சிறியதாயிருக்கும் மனித இருதயம் செய்யும் வேலைகள் அற்புதமானவை. மனித இருதயம் 60 வருஷ காலம் ரத்தத்தைப் 'பம்பு' மாதிரி இறைக்கிறது; நிமிஷம் ஒன்றுக்கு 75 தடவை வீதம் இப்படி இறைக்கிறது. எல்லா ரத்தக் குழாய்களுக்கும் ரத்தத்தை இறைத்துப் பாய்ச்சுவது இருதயந்தான்.

## அபாரமான சக்தி

இருதயம் தன்முழுச்சக்தியையும் கொண்டு எந்த நேரமும் வேலை செய்வதில்லை. இருப்பாக அபாரமான சக்தியை வைத்துக் கொண்டிருக்கிறது. நெருக்கடியோ அவசரத் தேவையோ வரும்போது அந்த இரும்புச் சக்தி உபயோகமாகிறது. சரீரத்திற்குக் கடுமையான சிரமம் ஏற்படும் போது இருதயத்தின் சகஜமான உழைப்பு நான்கு மடங்காகக் கூடப் பெருகிவிடும்.

**நரம்புத் தளர்ச்சி** இருதய நோயின் வாயிற்படி. இருதய நோய்க்கு வரவேற்புப் பத்திரம் வாசித்து உடலிலுள்ள வரவேற்கும் பொறுப்பை நரம்புத் தளர்ச்சி நோயான "நியூரோ சர்குலேடரி ஆஸ்த்மா" ஏற்றுக் கொண்டிருக்கிறது. ஆனால் இந்தி நோயின் காரணமாக உண்டாகும் இருதயநோய மனிதனை விரைவில் இறந்துவிட அனுமதிப்பதில்லை. குறைந்தது ஒரு வருடகாலமாவது அடிக்கடி மார்புவலியால வருந்தச் செய்த பின்பே அவனை மரண தேவதையிடம ஒப்படைக்கிறது. நாடித்துடிப்பை பாதிக்கச் செய்யும் சக்தியும் இதற்கு உண்டு. வேகமாகத் துடிப்பை உண்டாக்கி மனிதனைக் கவலையில் ஆழ்த்தும். துடிப்பு இருப்பதாகவே தெரியாமல் செய்து மறுபடியும் சாதாரண நிலைக்குக் கொண்டு வருவதும் இதன் தன்மை இத்தகைய இதன் விளையாட்டை "பராசிகமல் தாட்சிகார்டியா" என்று விஞ்ஞானிகள் ஆராய்ந்து அமைக்கின்றனர்.

## நினைவில் நிலைத்து நிற்கவேண்டியவை

1. பூமியை வலம் வந்த முதலாவது அமிரிக்கர் (ஐக்கிய அமெரிக்கா-U.S) யார்?
ஜோன் கிளென் (John Glenn)
2. உதைபந்தாட்ட உலகக் கிண்ணப் (World Cup) போட்டிகளை நடத்தும் நிறுவனத்தின் பெயர் என்ன?
ஃபிஃபா (FIFA)
3. பேமா / பர்மா (Burma) நாட்டின் தற்போதைய பெயர் என்ன?
மியன்மர் (Myanmar)
4. எக்ஸ் கதிர்களை (X Rays) உபயோகிக்கும் முறையை உருவாக்கியவர் யார்?
வில்ஹெம் றொன்ற்கன் (Wilhelm Rontgen)
5. ஐக்கிய இராச்சியத்தில் (United Kingdom) அடங்கும் பகுதிகள் எத்தனை? (II) இவை யாவை?
1. நான்கு (4)
(I) இங்கிலாந்து (England) II ஸ்கொத்லாந்து (Scotland)
(III) வேல்ஸ் (Wales)
(IV) வட அயர்லாந்து (Northern Ireland)
6. இதுவரை உலகிலே எந்தத் தலைவருடைய இறுதிச் சடங்கிற்கு (Funeral) அதிகூடிய மக்கள் (largest crowd) பங்கு பற்றினர்?
தமிழ்நாட்டு முன்னாள் முதலமைச்சரும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஸ்தாபகத் தலைவருமான பேரறிஞர் சி.என். அண்ணாத்துரை
7. ஐக்கிய நாடுகள் நிறுவனத்தின் (United Nationas Organization) அங்கத்துவம் வகிக்கும் மிகச் சிறிய நாடு எது?
மொனாக்கோ (Monaco)
8. உலகில் பரப்பளவில் அதிபெரிய நாட்டின் தலைவர் (சனாதிபதி யார்?
பொறிய் யெல்சின் (Boris Yelstin)
9. நோய்த்தடுப்பு முறையை (Vaccination) முதன் முதலில் ஏற்படுத்தியவர் யார்?
எட்வேட் யென்னர் (Edward Jenner)
10. உலகில் முதன்முதலில் எக்கெடமி (Academy) என்ற பெயரில் கல்வி நிலையம் எந்நாட்டில் நிறுவப்பட்டது?
கிரேக்க நாட்டில்/கிறிஸ் (Greece)

-A. Arunthavarajah




நான் ஒரு வழக்கறிஞர் இல்லை

குடிவரவுச் சட்டம்
Immigration Law

குற்றவியல் சட்டம்
Criminal Law

குற்றவியல் தண்டனை பெறுவதனால்....



உங்கள் வதிவிட உரிமை - Permanent Resident
குடியுரிமை - Citizenship
குடும்ப ஒன்றிணைவு - Family Sponsorship
பாதிக்கப்படலாம்.



வாகன விபத்தில் பாதிக்கப்பட்டீர்களா?
அடுத்து செய்யவேண்டியது என்ன?



முதலில் வைத்தியசாலைக்கு செல்லுங்கள்...
பின் இவரை அழையுங்கள்...

எஸ்.கே. தீசன்
(416) 631-6322



IMMIGRATION CONSULTANT
Christina Staden, M.A.
Member of the Association of Immigration Counsel of Canada
18 years experience
Free assessment,
LOW COST,
*money back guarantee*
*INDEPENDENT ★ BUSINESS ★FAMILY
★HUMANITARIAN ★STUDENT
Tel. Toronto (416) 222-5254
Mississauga (905) 501-0307
9AM.-9P.M.



TAMIL INSURANCE CLAIMS CONSULTANT
தமிழில் இலவசஆலோசனை
வாகன விபத்து அல்லது வீடு விபத்து ஏற்பட்டால் என்ன செய்ய வேண்டும்?
- தகுந்த ஆலோசனை
- சட்ட உரிமைகள்
- விபத்துக்குள்ளாகியவரின் சம்பள இழப்பீடு
- உரிய நஷ்டஈடு
- மற்றைய இழப்பீடு
- மற்றும் நுணுக்கமான ஆலோசனைகளும், அறிவுரைகளும் தமிழிலும் ஆங்கிலத்திலும் சிறந்தமுறையில் பெற்றுக்கொள்ள

ரவி நடராஜா (12 வருட கால அனுபவமுள்ளவர்)
தொடர்புகொள்ளுங்கள்: TEL: (416) 245-6555
FAX: (416) 245-7766
2095 Weston Rd., #201 (South of HWY 401),
Toronto, Ont. M9N 1X7

NIRU நிரு

Niru Brand®

நிரு பிராண்ட் தயாரிப்பாளர்களின் தரமான பொருட்களின் அணியில், மேலும் ஒரு நாவிற்கினிய படைப்பு!

இதோ!




நிரு பிராண்ட் பரிசுத்திட்டத்தின் கீழ் கெட்டிப்பால் லேபல்களுக்கு 10 புள்ளிகள் வழங்கப்படும்.

நிரு பிராண்ட் "கெட்டிப்பால்"

சுவையின் தரத்தை ஒரு முறை உபயோகித்துப் பாருங்கள்

தரமான நிரு பிராண்ட் தயாரிப்புகள் கனடிய சுகாதார விதிகளுக்கமைய தயாரிக்கப்படுபவை.

சகல தமிழ் வர்த்தக நிலையங்களிலும் கிடைக்கின்றது.

Niru Enterprise Inc., Scarborough, Ontario Tel: (416) 750-1976

சூரியக்குடும்பம் 4

## விண்வெளி

தருபவர் - கனி

ஒரு பிரகாசமான தூசுக் கூட்டத்தில் இருந்து சூரிய நெபுலாவில் இருந்து சூரியக் குடும்பம் உருவானது எனப்பார்த்தோம். இன்று எவ்விதம் கோள்கள் உருவாகின எனப் பார்ப்போம.

சூரிய நெபுலாவில் தூசுக்களும், வாயுக்களும், சில பாரமான உலோகங்களின் அணுக்களும் ஆரம்பத்தில் காணப்பட்டன. இவை தமக்குள் இருந்த ஈர்ப்புவிசை காரணமாக ஒன்றுடன் ஒன்று கவரப்பட்டன. அதேசமயம் சூரிய நெபுலாக்கு வெளியே இருந்த கலக்சிகள், தூசுப் படலங்கள், வேறு நட்சத்திரத் தொகுதிகள் என்பவற்றின் ஈர்ப்புக் காரணமாக சூரிய நெபுலாவானது சுழற்சிக்குள்ளாகத் தொடங்கியது. இதன் விளைவாக சூரிய நெபுலாவானது சுருங்கி, ஒடுங்கி ஒரு தட்டு வடிவில் வந்து அந்தத் தட்டு வேகமாகச் சுழரத் தொடங்கியது. தட்டின் மையப் பகுதியில் துணிக்கைகள் அதிகமாகவும், நெருக்கமாகவும் சேர பலவேதியல் மாற்றங்களுடன் அம்மையப்பகுதி ஒரு நட்சத்திரமாக அதாவது நமது சூரியனாக மாறியது. இந்த மையப்பகுதி சூரியனாக மாறிய அதே காலப்பகுதியில் வெளிப்பகுதியின் துணிக்கைகள் ஆங்காங்கே திரண்டு தத்தம் நிலைகளுக்கு ஏற்ப கோள்களாக மாறின. இக் கோள்களாக மாறிய நிகழ்வானது மூன்று படி நிலைகளில் நடந்தன.

முதல் நிலையில் தூசுக்கள், வாயு அணுக்கள் என்பன ஒன்று சேர்ந்து இணைந்து சற்றுப் பெரியதான துணிக்கைகளைத் தோற்றின. இங்கு தூசுத் துணிக்கைகள், வாயு அணுக்கள் என்பவற்றின் திணிவுகள் மிகச் சிறியதாகையால் துணிக்கைகள் இணைவதற்கு ஈர்ப்பு விசை உதவி செய்யவில்லை. பதிலாக, சுழன்று கொண்டு இருந்த சூரிய நெபுலாவின் துணிக்கைகள் வாயு அணுக்கள் என்பன ஒன்றுடன் ஒன்று மோதிக் கொள்கையில் தூசுத் துணிக்கைகளுடன் வாயுக்களின் அணுக்கள் ஒட்டிக் கொண்டன. இதனால் தூசுத் துணிக்கைகளுடன் வாயுக்களின் அணுக்கள் ஒட்டிக் கொண்டன. இதனால் தூசுத் துணிக்கைகளுடன் அதிகரிக்கத் தொடங்கின. இவ்விதம் துணிக்கைகளுடன் வாயுத் திணிவுகள் இணைவது ஒரு குறிப்பிட்ட திணிவு அதிகரிப்பின் மேல் நிகழமுடியாது. இனி வேகமாகச் சுழலும் நெபுலாவில் துணிக்கள் ஒன்றுடன் ஒன்று உரசிச் செல்வதால் துணிக்கைகளின் நிலைமின் ஏற்றங்கள் தோன்றின. இந்த நிலைமின் ஏற்றங்களினால் உண்டான நிலைமின் புலத்தின் விளைவாக பாரம் கூடிய திணிவுகள் சில ஒன்றிணையத் தொடங்கின. இந்நிலை இவற்றின் பருமன்கள் சில கிலோமீட்டர் விட்டமுடைய பெரிய அளவில் வந்துவிடும் அத்துடன் அவற்றின் திணிவுகளும் பெரிய அளவில் வந்துவிடும். இந்நிலையில் இவற்றை நாம் கோள்துகள்கள் என்போம். இதுவே முதலாவது நிலையாகும்.

இனி இரண்டாவது நிலையில் என்ன நடைபெற்றது எனப்பார்ப்போம். வெவ்வேறு வகையான கோள்துகள்கள் காணப்பட்ட சூரிய நெபுலாவில் பாரமானவை மையப்பகுதியை நெருக்க பாரம் குறைந்தவை வெளிப்பகுதியை நிரப்பத் தொடங்கின. அத்துடன் கோள்துகள்கள் சூரிய நெபுலாவில் வலம் வருகையில் சூரிய நெபுலாவனது கிட்டத்தட்ட பூரணமாக ஒரு தட்டுவடிவிற்கு வந்து விட்டது. அத்துடன் பெரிய திணிவுகளுடைய கோள்துகள்கள் தமது ஈர்ப்பு சக்தியின் காரணமாக அருகில் வலம்வரும் கோள்துகள்களை ஈர்த்து தம்முடன் இணைத்துக் கொண்டன. இதன் காரணமாகப் பெரியபெரிய கோள்துகள்கள் உருவாக அவற்றின் ஈர்ப்புப் புலத்தின் வலிமையும் கூடத் தொடங்கின. எனவே பெரிய கோள்துகள்கள் வேறுகோள்துகள்களை மேலும் மேலும் ஈர்த்துத் தம்முடன் இணைத்துக் கொண்டன. இந்நிலையில் இளம் கோள் ஒன்று தோன்றும். இத்துடன் இரண்டாவது நிலை முடிவடைய மூன்ற நிலை ஆரம்பமாகும்.

அடுத்து இளம் கோள்கள் தமது நிலையை உறுதிப்படுத்தத் தொடங்கின. கோளின் உள்ளேயே துணிக்கைகள் வாயுக்கள் என்பன தமது சொந்த ஈர்ப்புப்புலம், வெப்பநிலை, சுழற்சி என்பவற்றிற்கு ஏற்ப மாறுதல்களை ஏற்படுத்தத் தொடங்கின. இந்நிலையில் நெபுலாவின் மத்தியில் நட்சத்திரம் அதாவது நமது சூரியன் உருப் பெற்று முடிவடைந்து விட்டது. இந்நிலையில் நமது சூரியன் சூடாகவும் ஒளிர்வுள்ளதாகவும் மாறி ஒளிக்கதிர்களையும், வெப்பக்கதிர்களையும், கதிர் வீச்சுக்கள், வெளிவீசத் தொடங்கியது. இச் சக்திகளின் தள்ளுவிசை காரணமாக உதிரிகளாக சூரிய நெபுலாவில் காணப்பட்ட தூசுக்கள், வாயுக்கள், சிறிய கோள்துகள்கள் பனிப்படலங்கள் என்பன எல்லாம் வெளியே எங்கோ தொலைவில் சூனியத்துள் தள்ளப்பட்டு விட கோள்களின் தோற்றப்பாட்டு நிகழ்வு முடிவுற்றது. அத்துடன் சூரிய நெபுலாத் தட்டில் கோள்கள் மாத்திரம் தங்கிவிட சூரிய நெபுலாவானது சூரியத் தொகுதி அதாவது சூரியக் குடும்பமாக மாறிவிட்டது. இந்த நிகழ்வு முற்றுப் பெற்று இன்று சுமார் 4.6 பில்லியன் வருடங்கள் ஆகிவிட்டன.

இதுவே கோள்களின் தோற்றத்திற்கான இன்று ஏற்றுக் கொள்ளப்பட்ட விஞ்ஞான விளக்கமாகும். இந்த மூன்று படிநிலைகளும் சடுதியாக ஏற்பட்டவையல்ல. ஒவ்வொன்றுக்குமே பல்லாயிரக்கணக்கான வருடங்கள் எடுத்தன. அத்துடன் சூரியனும் கோள்களும் ஏககாலத்திலே உருப்பெற்றனவாகும். அடுத்த முறையில் எவ்வகையான கோள்கள் எங்கெங்கு எவ்வித உள்ளன எனப்பார்ப்போம்.

# அன்றிலிருந்து இன்றுவரை சினிமா

## 1931 ஆம் ஆண்டு தொடக்கம் வெளியான படங்கள்

-தொகுத்துத் தருபவர் - பரம்

### 1956

1. அமரதீபம்
2. அலிபாபாவும் 40 தீருடர்களும்*
3. ஆசை
4. ஒன்றே குலம்
5. கண்ணின் மணிகள்
6. காலம் மாறிப்போச்சு
7. குடும்ப விளக்கு
8. குலதெய்வம்
9. கோகிலவாணி
10. சதாரம்
11. தாய்க்குப் பின் தாரம்
12. தெனாலிராமன்
13. நல்ல வீடு
14. நன்நம்பிக்கை
15. நாகபஞ்சமி
16. நானே ராஜா
17. நான் பெற்ற செல்வம்
18. படித்த பெண்
19. பாசவலை
20. பிரேம பாசம்
21. பெண்ணின் பெருமை
22. மதுரை வீரன்
23. மந்திரவாதி
24. மா்ம வீரன்
25. மறுமலர்ச்சி
26. மாதா் குல மாணிக்கம்
27. மூன்று பெண்கள்
28. ரங்கூன் ராதா
29. ரம்பையின் காதல்
30. ராஜா ராணி
31. வானரதம்
32. வாழ்விலே ஒரு நாள்
33. வெறும் பேச்சல்ல



'மதுரை வீரன்'- டி.எஸ். பாலையா, பி. பானுமதியுடன்

1956ம் ஆண்டு 33 தமிழ்ப்படங்கள் வெளிவந்தன. இதில் சிவாஜி கணேசனின் படங்கள் 9 ம், எம். ஜி. ஆரின் படங்கள் 8 ம் வெளிவந்தன. சிவாஜியின் படங்கள்: நான்பெற்ற செல்வம், நல்ல வீடு, நானே ராஜா, தெனாலிராமன், பெண்ணின் பெருமை, ராஜா ராணி, அமரதீபம், வாழ்வில் ஒரு நாள் மற்றும் ரங்கூன் ராதா.

எம்.ஜி.ஆரின் படங்களாக வெளிவந்தவை: அலிபாபாவும் 40 திருடர்கள், மதுரை வீரன், தாய்க்குப் பின் தாரம்.

இவ்வருடம் தமிழ் சினிமாவில் ஒரு சிறப்பாக இருந்தது. அதாவது தமிழகத்தில் தயாரான முதல் வர்ணப்படமாக 'அலிபாபாவும் 40 திருடர்களும்' வெளிவந்தது. 1952ம் ஆண்டு "ஆன்" என்ற படம் தமிழில் வர்ணத்தில வந்திருந்தபோதும், 'அலிபாபாவும் 40 திருடர்களுமே' தமிழில் தயாரான முதல் வர்ணப்படமாகும்.



'அலிபாபாவும் 40 திருடர்களும்'- பி. பானுமதியுடன்



'தாய்க்குப்பின் தாரம்'- பி. பானுமதியுடன்

1956ம் ஆண்டில் சிறந்த படமாக சென்னை சினிமா சங்கத்தால் தெரிவு செய்த படம 'அலிபாபாவும் 40 திருடர்களும்', சிறந்த நடிகர்களாக சிவாஜிகணேசனும், பானுமதியும 'ரங்கூன் ராதா' என்ற படத்திற்காக தெரிவு செய்யப்பட்டார்கள்

துணை நடிகராக எஸ். எஸ். ராஜேந்திரன "குலதெய்வம்" என்ற படத்திற்காக தெரிவானார். மதுரைவீரன் தயாரிக்க அண்ணளவாக 2 வருடங்கள் எடுத்தது. இதே ஆண்டு குமாரதேவன் என்ற படம் தயாரிப்பில் நின்று போனது.

ராஜா ராணி" இல் கலைஞர் கருணாநிதி எழுதிய (6 பக்கங்கள் கொண்ட அழகு தமிழ் வசனத்தை ஒரே ஷாட்டில் 20 நிமிடங்களில் சிவாஜி பேசிமுடித்தார் என்பது "ராஜா ராணி"யின் ஒரு சிறப்பாக நிகழ்ந்தது.

## நான் வாழப் போகிறேன்

### சுவடு 26

-வீணை மைந்தன்

நடிகர் திலகம் ஒரு வேட்டைப் பிரியர். 50 களில் முதுமலைக் காட்டில் அவர் சுட்ட ஒரு வேங்கையைத் தான் இங்கு வீழ்த்தியது. காட்சிப் பெருளாகப் பார்க்கிறீர்கள். "அன்னை இல்லத்தில் வரவேற்பறையில் சிவாஜியின். புலியுடன் வீணைமைந்தன்.



"என்ன புறப்படப்போறீங்களா! சும்மா உட்காருங்கய்யா! இருங்க நான் வச்சதுதான் சட்டம். காபி குடியுங்க. நா குடிக்கப்போறன். நீங்களும் குடிக்கனும்" மத்தியானம் சாப்பிட்டதின் பின் அவர் கொஞ்சம் ஓய்வெடுக்கட்டும்; அவரைத் தொந்தரவு செய்யக் கூடாது, என்ற எண்ணத்திலேயே நாங்கள் புறப்பட ஆயத்தமானோம்.. ஆனால் அவர் அதற்கு ஒப்புக் கொள்ளவில்லை.

மனதிற்கு யாரையாவது பிடித்துப்போய் விட்டால் இலேசில் விடமாட்டார். அதே போல் நீண்ட காலம் பழகியவர்களுடன். ஏதும் மனஸ்தாபம் சந்தேகம் கருத்து முரண்பாடு வந்தாலும் அந்த உறவில் விரிசல் வருவதும் சிவாஜி அவர்களைப் பொறுத்தளவில் தவிர்க்க முடியாதது. இப்படியான குணம் மக்கள் திலகத்திடமும் உண்டு. எங்களைப் போன்ற சாதாரண மனிதர்களிடமும் உண்டு. என்னிடமும் உண்டு. சில சமயம் காலம் என்னை ஆற்றுவதுமுண்டு. உணர்ச்சிவசப்படும் மனிதர்களிடம் இக் குணங்களைச் சாதாரணமாகப் பார்க்கலாம். குடும்பம், அரசியல், சமூகம், கலையுலகம் என்று உரையாடல் பல திசைகளுக்கும் போவதும் வருவதுமாக இருந்தது.



ஓரிடத்தில் தலைவர் காமராசரைப் பற்றிப் பேச்சு எழுந்தபோது கலாரசனையே அற்றவர். பிடித்து இழுத்து இதைப் பாருங்கய்யா என்று வற்புறுத்தினால் தான் பார்ப்பார். அவசியம் கருதிக் கட்டாயப்படுத்த வேண்டும். மக்கள் திலகம் பற்றிப் பேச்சு வாக்கில் "அண்ணன்"என்று மரியாதையுடன் கூறினார். அரசு நிர்வாகங்களில் ஊழல் பற்றி உரையாடும் போதே "அண்ணன்" ஆட்சி பற்றிக் குறிப்பிட்டார்.

"என்னைச் சுற்றியிருந்தவங்கள் எல்லாம் நல்லா இருக்காங்க. என் பேரைச் சொல்லி ஆளாயிட்டாங்க. நான் 'சிவாஜி'யின் ஆள் என்று சொல்லிச் சொல்லியே நல்லா சம்பாதிச்சிட்டாங்க. இப்போ யாருமே என்னோட இல்லை..." என்று தனது அரசியல் ஈடுபாட்டின் வீழ்ச்சி பற்றிக் குறிப்பிட்டார்.

எத்தனையோ மகா பெரியவர்களுடனும், அரசியல் ஜாம்பவான்களிடமும், தலைவர்களிடத்தும் சரிசமமாக இருந்து உரையாடிய நமது கலைச் சக்கரவர்த்தி எங்களையும் சமமாக மதித்து அன்பு செலுத்தி, உட்காருங்கய்யா" என்று உரையாடி அந்த மாலைப் பொழுது எங்களுக்குப் பொன்மாலைப் பொழுதாகவிருந்தது" "ஊரிலை (கனடாவில்) என்னைய்யா பண்ணுறீங்க. குடும்பம் எல்லாம் நல்லாயிருக்கா. "தொழில் குடும்பம் இரண்டும் முக்கியம்" ஒரு குடும்பத்தலைவனாகவிருந்து அவர் காட்டிய அக்கறை என்னை மிகவும் பாதித்தது. இலங்கை வானொலியில் சில நிகழ்ச்சிகள் பற்றி நண்பர் அப்துல் ஹமீது அவர்களுடன் விவாதித்தார். விவாதம் சூடாகவேயிருந்தது.

மனுஷர் மிகவம் உன்னிப்பாக எல்லா நிகழ்ச்சிகளையும் செவிமடுக்கிறார். அனைத்துப் பத்திரிகைகளையும் ஆழமாகப் படிக்கிறார். இப்போதெல்லாம் போதிய நேரம் அவருக்குக் கிட்டுகிறது. பல வருடங்களுக்கு முன்பு இலங்கை வந்திருந்த போது (பலதடவை வந்திருக்கிறார்) கதிர்காமம் சென்றதையும் அங்கு முருகனுக்குப் பூசை செய்பவரின் அசிங்கமான காரியங்களையும் விமர்சனம் செய்து வேதனைப்பட்டார்.

இப்போதும் கூட பிரபு, ராம்குமாரின் பிள்ளைகளுக்கு கதிர்காம முருகனுக்கு நேர்த்திக் கடன் இருப்பதாகவும் அங்குள்ள சூழலினால் தான் இப்போது வர முடியாது. ஆனால் பிள்ளைகளை அனுப்பி வைத்தால் நீர் (ஹமீதைப் பார்த்து) அவங்களை நல்லபடி கதிர்காமம் அழைத்துப் போய் ஆக வேண்டியவைகளைக் கவனிப்பீராய்யா...! என்று ஹமீதைக் கேட்டார். "அம்மாவையும் பிள்ளைகளையும் அனுப்பிவையுங்க. எந்தவிதப் பிரச்சினையுமில்லாமல் நான் பார்த்துக் கொள்கிறேன்" என்று அந்த ஏகலைவன் குருதட்சனை வழங்குவதுபோல் பணிவுடன் பதிலுரைத்தார். நடிகர் திலகம் அவர்கள், தனது சகோதரி ஒருவரை அறிமுகம் செய்து வைத்தார். அப்போது ஐம்பதுகளில் திருச்சியில் அவரது சகோதரி பத்மாவதி அம்மையாருக்கு சிவாஜி அவர்கள் செய்து வைத்த திருமணம் பற்றிக் குறிப்பிட்டேன். "அவதான்யா இவ..", ஹமீது இடையில் குறுக்கிட்டு, "உங்க வீட்டு ஒவ்வொரு விடயத்தையும் ஆழமாகக் கவனிக்கிற இரசிகர்", என்று பெருமையாகக் கூறினார். நடிகர்திலகத்தின் முகத்தில் மகிழ்ச்சி பொங்கியது. "நல்லாயிருங்க...! " என்று மனம் திறந்து வாழ்த்தினார். இப்போது முக்கியமான இடத்திற்கு உரையாடல் திசை திரும்பியது. "உங்க ஆள்தான்யா வீரன். தமிழன் தலை நிமிர்ந்து வாழக்கூடிய அளவிற்குப் பல சாதனைகள் புரிந்திட்டிருக்கார். அவன்தான்யா தலைவன்" என்று தலைவர் பிரபாகரன் அவர்களைப் பற்றி மிக உயர்வாகப் பேசினார்.

ஒன்று மட்டும் உண்மை, சிவாஜி அவர்கள் விடுதலைப் புலிகளைப் பற்றியோ தலைவரைப் பற்றியோ என்னிடம் பேச வேண்டிய அவசியமுமில்லை. மாற்றுக் கருத்து இருந்தால் கூட நான் அவரிடம் வாதம் செய்யப்போவதுமில்லை. ஆனால் அவருடைய ஆழ்மனதில் ஈழத் தமிழர்களின் வீரமும், விடுதலை வேட்கையும் மிக உயர்ந்த நிலையில் இருந்ததை நான் புரிந்து கொண்டேன். சில சமயங்களில் சில உணர்வுகளை சிலருடன் தான் பகிர்ந்து கொள்ள முடியும். சில இடங்களில் மௌனமாகத் தான் இருக்க வேண்டும். அவருடைய சூழல் அப்படி. அது புரியாதவர்கள் சிவாஜி அவர்களைப் பற்றி என்னவெல்லாமோ பிதற்றுவார்கள். விளம்பரத்திற்காக போலியான வார்த்தைகள் கூறவேண்டிய தேவை அவருக்கில்லை. சிவாஜி குடும்பம் தஞ்சாவூர் தோட்டத்தில் எம்மவர்களுக்குச் செய்த பல உதவிகளை இங்கு நான் குறிப்பிடவில்லை. நல்ல செயல்களைக் கூட நாடறியாமல் புதைக்க வேண்டிய தேவையிருக்கு. நமது பிள்ளைகள் சிலர் சில நாடுகளில் இன்றும் உயிருடன் வாழ சிவாஜி அவர்களும் அவரது துணைவியாரும் மிகவும் உதவியாக இருந்திருக்கிறார்கள். "நீங்கள் எல்லாம் கோழைகள் ஐயா! உயிருக்காக வெளிநாட்டில் வாழ்கிறீர்கள். உண்மையான சுதந்திர வீரர்கள் அங்குதான் வாழ்கிறார்கள்"

"எத்தனை பேரை அவங்கள் சுட்டு விட முடியும். வெள்ளைக்காரன் சுட்டுவிடுவான் என்று நினைத்திருந்தால் எங்களுக்கு இன்று சுதந்திரம் கிடைத்திருக்குமா... என்ன !.." "எல்லோரும் திரண்டெழுந்து ஒற்றுமையாக எதிர்த்து நின்றால் அவனால் ஒன்றும் செய்ய முடியாது. உலகமும் பார்த்துக் கொண்டிருக்காது." "சுதந்திரம் வேண்டுமென்றால் சொந்த நாட்டிலேயே இருந்து போராடவேண்டும் வெளிநாடுகளுக்குப் போய் தஞ்சம் புகக் கூடாது. இது என்னுடைய கருத்து சொல்லிப்புட்டேன்." வெள்ளையனை எதிர்த்துப் போராடிய பரம்பரையில் வந்தவரால் இப்படித்தானே கூறமுடியும். அவருடைய கருத்தை என்னால் மறுத்துப் பேசமுடியவில்லை. மறக்க முடியாத நினைவுகளுடன் அந்தக் கலைமாமேதையின் இல்லத்திலிருந்து வீடு திரும்பினேன்.

அடுத்த தொடரில்...

# விளையாட்டுத் தகவல்கள் (25)

**எஸ். கணேஷ்**



## கனடாவில் National Athletic Award பெறும் தமிழ் மகன் - ஜெயஹரன்

### Athletic Achievement

கனடாவில் எமது தமிழ் சமூகம் பல்வேறு துறைகளில் மேம்பட்டு வருவதை தற்போது தெளிவாக காணலாம். இதற்கு தமிழ் மக்களின கடின உழைப்பும் அயராத முயற்சியுமே காரணம் ஆகும். ஆனாலும் கனடாவில சில சிறு சிறு பிரச்சனைகளை முன்வைத்து எமது முழுத் தமிழ் சமூகத்திற்கும் தவறான முத்திரையை சில ஆங்கில பத்திரிகைகளாலும் (Media) வேறு சில தொடர்பு சாதனங்களாலும் சூட்ட எத்தனிப்பது மிக வருத்தத்திற்குரியது. ஆனாலும் தமிழ் மக்கள் கல்வி, விளையாட்டு, சமூக சேவை போன்ற சகல துறைகளிலும் தாங்கள் சிறந்தவர்கள் என்பதை நிரூபித்து வருகின்றனர்.

விளையாட்டு துறையில் எமது தாயகத்தில் (இலங்கை) தமிழர் என்ற ஒரே காரணத்திற்காக புறக்கணிக்கப்பட்டாலும் புகுந்த அகத்தில் (கனடாவில்) திறமை இருந்தால் எம்மை இந்நாட்டில் அடையாளம் காட்ட முடியும் என்பதை விளையாட்டு துறையில் இங்கு பலர் நிரூபித்து வருகின்றனர். Tennis விளையாட்டில் கனடா சார்பாக சோன்னியா ஜெயசீலன், Cricket விளையாட்டில கனடா சார்பாக விளையாட Centurions கழகத்தில் இருந்து 3 தமிழ் வீரர்கள், அத்துடன் Torontoவில் Premier Division இல் முதலிடம் வகிக்கும் தமிழ் வீரர்கள் ஆன Centurions கழகம், உதைபந்தாட்டத்தில் Toronto வில் Goodwill Award யை வென்ற United Tamils அணியினர் தற்போது Outdoor இல் புகழ் பரப்பும் Scar. Rangers அணியினர், Indoor உதைபந்தாட்டத்தில் முதலிடம் வகிக்கும் Canadian Tamils அணியினர் இப்படி அடுக்கிக் கொண்டே போகலாம்.


ஜெயஹரன்

இவ் வரிசையில் Athletic துறையில் தற்போது சாதனைகள் படைத்து வரும் மொன்றியலைச் சேர்ந்த **ஜெயஹரன் திருச்செல்வம்** என்னும் இவ் வீரரைப் பற்றி இவ்வாரம் பார்ப்போம். கியுபெக்கில் மொன்றியலில் வசிப்பவர் செல்வன் ஜெயஹரன் திருச்செல்வம். இவருக்கு வயது பதினேழு. மொன்றியால் James Lyng High School இல் மாணவர். கனடாவில் முதன்முதலில் தேசிய மட்டத்தில் (National Champion Ship) இல் விருது பெற்ற முதல் தமிழ் மகன் இவராகும். கடந்த ஆகஸ்ட் மாதம் கனடாவின் பத்து மாகாணங்களையும் உள்ளடக்கிய கனேடிய 22வது தேசிய விளையாட்டு போட்டியில் உயரம் பாய்தலில் மூன்றாவது இடத்தினை பெற்று எமது தமிழ் சமூகத்தின் பெருமையை அடையாளம காட்டியுள்ளார். National Championship இல் பங்கு பெறுவது என்பது மிகவும் ஒரு கடினமான காரியம் ஆகும். முதலில் Provincial Level இல் Champion ஆக வந்தாலேயே National இல் பங்கு பெற முடியும். அத்துடன் முழு Province யையுமே பிரதிநிதித்துவப் படுத்தும் சிறந்த வீரர் ஆகவும் இருத்தல் வேண்டும். 1999 பெப்ரவரி மாதம் Toronto City Hall இல் நடைபெற்ற தமிழர் தகவல் சஞ்சிகையின் விருது விழாவில் ஜெயஹரன் Athletic Achievement க்காக தங்கப் பதக்கம் சூட்டி கௌரவிக்கப்பட்டார்.

கியுபெக் மாகாணத்தில் உயரம் பாய்தலில் மூன்று தடவைகள் முதலிடத்தை பெற்றதாலேயே கியுபெக் மாகாணத்தின் பிரதிநிதியாக கனடாவின் National Champion Shipக்கு அனுப்பப்பட்டார். 1996ம் ஆண்டிலிருந்து பாடசாலையின் உயரம் பாய்தல் போட்டியில் தொடர்ந்து முதலிடத்தைப் பெற்றதனால் அனைவரது கவனமும் இவர் பக்கம் திரும்பியது. 1998ம் ஆண்டு கியுபெக் மாகாணம (Provincial Champion Ship) இல் உயரம் பாய்தலில் முதலாம் இடத்தையும் நீளம பாய்தலில் இரண்டாம் இடத்தையும், முப்பாச்சலில் மூன்றாம் இடத்தையும் பெற்று புதிய சாதனை ஒன்றினை உருவாக்கியுள்ளார். இது தவிர 200 மீற்றர் ஓட்டத்தில இவர் ஒரு புலி. இதற்காக பெற்ற பதக்கமும், பரிசுகளும் அனேகம். யோர்க (York) பல்கலைக் கழகம் நடத்தும் வருடாந்த விளையாட்டுப் போட்டியில தொடர்ந்து பங்குபற்றி பரிசுகளைப் பெற்று வருகின்றார். கடந்த ஆண்டு மொன்றியல் McGill பல்கலைக்கழகம் நடத்திய போட்டியிலும் உயரம் பாய்தலில முதலிடம் இவருக்கே. இவ்வருடம், கடந்த மாதம் அமெரிக்காவில் Hannover என்ற இடத்தில் நடைபெற்ற உயரம் பாய்தலில் வெண்கலப் பதக்கம் பெற்றார்.

கியுபெக் கிரிக்கெட் சம்மேளனத்தின் 18வயது பிரிவில் விளையாடி வருவதுடன், மொன்றியல் தமிழர் உதைபந்தாட்ட கழகமான Young Royal விளையாட்டு கழக Goal Keeperரும் ஆவார்.

இப்படி பல சாதனைகளை புரியும் இத்தமிழ் மகன் நிட்சயமாக இன்னும் சில வருடங்களில் கனடா சார்பாக Olympic இல் பங்கு பெறுவார். எமது தமிழ் சமூகத்தின் பெருமையை உலகத்திற்கு எடுத்தியம்புவார் என்ற நம்பிக்கையுடன், **"விளம்பரம்"** பத்திரிகை சார்பாக நல்ஆசிகள் கூறி வாழ்த்தி விடை பெறுகின்றேன்.

*"நன்றி"*

***"வாழ்க எமது வீரர்கள், வளர்க எமது திறமைகள்!"***

**21 ஆலோசனைகளைப்** (1ம் பக்க தொடர்ச்சி)

4. ஆக்கபூர்வமானவராகவும், ஆவலுள்ளவராகவும் உருவாகுங்கள் அல்லது மாறுங்கள்.
5. உங்களையும், மற்றவர்களையும் மன்னிப்பவராக இருங்கள்.
6. தாராளமானவுள்ளவராக இருங்கள்.
7. நன்றியுடையவராக இருங்கள்
8. ஒரு விடயத்தை உறுதியாக தொடர்ந்து செய்யுங்கள், உறுதியாக தொடர்ந்து செய்யுங்கள். உறுதியாக தொடர்ந்து செய்யுங்கள்.
9. மிகவும் அளவான சம்பளமானாலும் பணத்தைச் சேமிப்பதற்கு உங்களை கட்டுப்படுத்துங்கள். (உழைப்பதைவிட சேமிப்பதே சிறந்தது)
10. நீங்கள் எவ்வாறு நடத்தப்பட்டீர்களோ அல்லது நீங்கள் எவ்வாறு நடத்தப்பட வேண்டுமென விரும்புகிறீர்களோ அவ்வாறு நீங்கள் சந்திக்கும் ஒவ்வொருவரையும் நடத்துங்கள்.

(தொடரும்)

Pillayar Traders

SRILANKAN . EAST & WEST INDIAN
GROCERIES & TEXTTILES
3630 LAWRENCE AV. E., SCARBORO
☎ : 438-7746

**விஷேச போட்டி இல. 82**

G-15 ல் அங்கத்துவம் வகிக்கும் நாடுகளில் 10 ஐ தருக

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ஜ | டா | கோ | லா | யா | சி | லே | ம |
| மே | ன | சி | சு | பி | ம் | பி | யா |
| க் | க | க் | னு | ரா | பா | றே | ஸ் |
| கா | னா | மெ | வெ | ன் | வே | சி | ர |
| கை | லி | னா | நை | ம் | ள | பா | நே |
| ங் | சி | சீ | ஜீ | து | ப | கி | எ |
| ல | ரு | பே | ரி | ன் | பா | ப் | ஜ |
| இ | ந் | தி | யா | ரி | ஜீ | ல் | அ |

மேற்காட்டப்பட்ட சதுரப்பெட்டிகளில் பல சொற்கள் தலை கீழாக, சீராக, இடம் வலமாக, குறுக்குப்பாடாக (diagonal). நாலு மூலை வழியாகவும் அமைந்துள்ளது. இவற்றை இனம்கண்டு பினவருவனவற்றிற்குரிய விடைகளை March 12, 99 ற்கு முன்னர் விளம்பர விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும்.

**# 81ன் விடைகள்**

1. கனடா, இங்கிலாந்து, அவுஸ்ரேலியா, ஜமேக்கா, மலேசியா, நியூசிலாந்து, இங்கிலாந்து

பரிசு பெற்றோர்:

1) தனஞ்சேயன் P. Mississauga
2) ம. சரஸ்தி, Toronto

**பரிசுகள்:** பிள்ளையார் ரேடர்ஸ் இல் பாவிக்கக் கூடிய இரண்டு($15, $10) பெறுமதியான vouchers (இவற்றிற்கு cash value கிடையாது)

**விதிகள்:**ஒருவர் எத்தனை முறையும் முயற்சிக்கலாம்.பிள்ளையார் ரேடர்ஸ்,விளம்பரம் ஊழியர்கள் பங்குபற்ற முடியாது. விளம்பரம் குழுவின் முடிவே இறுதியானது.

YARLCAN
STEAM CLEANING




உங்கள்
சகலவிதமான
Cleaning
தேவைகளுக்கும்
அழையுங்கள்
மோகன்
Tel: 724-9085
Pager : 600 0335
Cell.: 721-9709

கலைமகள் புத்தக நிலையம்

*சிறுவர்களிற்கான நீதிக்கதைகள்
*தமிழ்ப் புத்தகங்கள்
*கனடிய தமிழ்ப் பத்திரிகைகள்
*இலங்கை/இந்திய பத்திரிகைகள்
*குறுங்கதைகள், சரித்திரப் புத்தகங்கள்
*CREDIT LEVEL தமிழ் பாடப்புத்தகங்கள்
*கனடிய தமிழ்ப் பிரசுரங்கள் மற்றும் பலப் பல

துரித பணமாற்றுச் சேவை

595 PARLIAMENT ST.
TORONTO, ONT.
☎: (416) 944-1818

3238 Eglinton Ave., East
Scarborough, Ont.
☎: (416) 265-3605

3850 FINCH AVE. E. GO 1A
SCARBOROUGH,ONT.
☎: (416) 292-9319

2580 Sheppard Ave. #9,
Newin Centre Mall, Mississauga, Ont.
☎: (905) 306-0494

# ஒன்ராரியோ மாகாணத்தில் வாகனம் செலுத்துதல்?

-சிவ பஞ்சலிங்கம்

## பகுதி (4)

கடந்த அத்தியாயங்களில் ஒன்ராரியோ மாகாணத்தில் வாகனம் செலுத்த விரும்பும் ஒருவரின் ஆரம்ப நிலையினையும், ஒரு அரச அங்கீகாரம் பெற்ற சாரதி பயிற்றுனரிடமோ அல்லது ஒரு சாரதி பயிற்சி பாடசாலையில் முழுமையாக பயிற்சி பெறுவதினூடாக கிடைக்கும் சலுகைகள் மற்றும் அதி வேக தெருக்களில் ஒரு சாரதி பயிற்றுனரின் உதவியுடன் மட்டுமே பயிற்சி பெறலாம் என்ற சட்ட பிரிவுகள் பற்றியும் மேலோட்டமாக ஆய்வு செய்தோம்.

... "சாரதி பயிற்றுனர்" என்பவர் உருவாகும் விதமும், அவரது தகைமைகள் ...யும் இவ் அத்தியாயத்தில் பார்ப்போம்.

சாரதி பயிற்றுனராக உருவாகி கொள்பவரின் ஆரம்ப நிலை தகைமைகள் யாது?

1) கனடாவில் சுமார் நான்கு வருடங்களுக்கு குறையாமல் வாகனம் செலுத்தி அனுபவம் உள்ளவராக இருத்தல் வேண்டும்
2. இவ் வாகனம் செலுத்திய அல்லது தொடர்ந்து செலுத்தி வரும் காலங்களில் வீதி விபத்துகள் ஒழுங்குகளை மீறிய நிலைமைகள் ஒரு குறிப்பிட்ட வரையறைக்கு மேல் இருக்க கூடாது.
3. குற்றவியல் செயல்களில் ஈடுபடாத நாட்டின் "நல்ல பிரஜைகள்" என்ற பதிவுகள் இருக்க வேண்டும்.

இத்தகைய தகைமை உள்ளவர்கள் ஒன்ராரியோ போக்கு வரத்து அமைச்சின் அங்கீகாரத்துடன் நடாத்தப்படும் சாரதி பயிற்றுனர் பயிற்சி நெறிக்கு விண்ணப்பிக்கலாம்.

**"சாரதி பயிற்றுனர்" பயிற்சி நெறியில் இரு வகையாக பயிற்சி திட்டங்கள் நடைபெறும்.**

(a). வாகன சாரதி பயிற்சி நெறியாளருக்கான கோட்பாடுகள் ரீதியான (Theory) பயிற்சி நெறி திட்டங்கள்.

அதாவது "வீதி விபத்து சட்டங்கள்" (Traffic Laws) உட்பட வாகன பயிற்சி வழங்கப்படும் போது, பாதுகாப்பாக படிப்படியாக வாகனம் செலுத்த கற்று கொடுக்கும் கற்கை நெறிகள் ஆகியன போதனாசிரியர் ஒருவரின் தலைமையில் குழுவாக வைத்து வகுப்பு அறையில் நடாத்தப்படும். "Road Worthy" என்னும் ஒன்ராரியோ மாகாணத்தின் போக்குவரத்து அமைச்சினால் உருவாக்கப்பட்ட புத்தகம் "As Like Sports Man Driving" என்னும் அமெரிக்காவில் வெளியிடப்பட்ட ...த்தகம், உட்பட பல்வேறு வகையான கையேடுகள், ஒன்ராரியோ மாகாணத்தின் ...தி விபத்து சட்ட நூல்கள், வீடியோ கசற்றுகள் ஆகியவற்றினை ஆதாரமாகவும் அடிப்படையாகவும் கொண்டு பயிற்சி நெறி நடாத்தப்படும்.

(b) வீதியில் நடைமுறை ரீதியான பயிற்சி திட்டங்கள் (Practical Training)

இது சாரதி பயிற்சி பெறும் ஒருவரை ஆரம்ப நிலையில் இருந்து படிப்படியாக எவ்வாறு வாகனம் செலுத்த கற்று கொடுப்பது என்ற நடைமுறை பயிற்சி நெறிகள், போதனாசிரியர் ஒருவரின் உதவியுடன் வீதியில் வைத்து வழி நடாத்தப்படுவதுடன் இறுதியில் இவைகளில் பரீட்சைகளும் நடைபெறும்.

இப் பயிற்சி நெறியினை பூரணமாக முடித்த பின்பு போக்குவரத்து அமைச்சின் வீதிப் பரீட்சைக்கு ஒரு முறை இப் பயிற்றுனர் சாதாரணமாக ஏனையோர் தோற்றுவது போல தோற்ற வேண்டும்.

இவ் சகல பெறுபேறுகளும் போக்குவரத்து அமைச்சின் தலைமை காரியாலத்திற்கு அனுப்பி வைப்பார்கள். அவர்களின் பரிசீலனையின் பின்பு சாரதி பயிற்சியாளருக்கான லைசென்சினை வழங்குவார்கள்.

இதன் பின்னர் தொழில் அனுமதி பத்திரிம் பெறுவதற்காக நகர லைசென்ஸ் கமிசனருக்கு விண்ணப்பிக்க வேண்டும். விண்ணப்பிக்கும் போது பின்வரும் விடயங்கள் பரிசீலனைக்கு தயாராக இருக்க வேண்டும்.

